# ஈழத்துத் தமிழ் அரங்கு: போரில் பெற்ற உள்ளார்ந்த ஆற்றலும் போருக்குப் பிந்தைய சவாலும்

**ஜெ. ஞானதாஸ்**

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
jeyaranjinee@yahoo.co.uk

**சுருக்கம்:** 'போரின் காரணமாகவும், போருக்கு அப்பாலும் ஈழத்துச் சூழலில் குறிப்பிடத்தக்க கணிசமான அரங்கச் செயற்பாடுகள் வெற்றிகண்டு வந்திருக்கின்றன'. இக் (போர்க்) காலத்தில் "தமிழ் அரங்குகள் மிகவும் அதிர்வியக்கம் (Vibrant) கொண்டனவாகவும், பல்வகைமை (Diversity) கொண்டனவாகவும் வெளிப்பாடடைந்துள்ளன" எனப் போர்க்கால அரங்கு தொடர்பான ஆய்வினை மேற்கொண்ட அரங்கவியலாளர் ஜேம்ஸ் தொம்சன் குறிப்பிடுகின்றார் (www.inplaceofwar.net, James Thompson, Theatre action group: raising the dust in a theatre at war, Manchester University, UK). இதன் அடிப்படையிலேயே போருக்குள் ஈழத்துத் தமிழ் அரங்கு பெற்ற 'உள்ளார்ந்த ஆற்றல்' அல்லது 'வீரியம்' (Potentiality) என்பதனை அடையாளம் காணக்கூடியதாக உள்ளது. அதேவேளையில் "உள்நாட்டு யுத்தத்தினால் இலங்கையின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நிலவிய பதற்றம், அழிவு காரணமாகத் தமிழ் அரங்கு இல்லாமற் போய்விட்டது" (Obeyesekere Ranjinee (1999), Srilankan Theatre in a time of terror political satire in a permitted space, Srilanka, P:15) என்கின்ற சிங்கள அரங்க ஆய்வாளரான ராஜினி ஒபேயசேகரவின் கூற்றானது, போர்க்காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அரங்கச் செயற்பாடுகள் அரங்குகளாகப் பார்க்கப்படாத அல்லது உள்வாங்கிக் கொள்ளப்படாத போக்கினைப் பிரதிபலிப்பதாகவும் உள்ளது. போருக்குப் பிந்தைய இன்றைய நிலைமையில் போர்க்கால அரங்கச் செயற்பாடுகளை அவ்வாறே முன்னெடுப்பதற்கான எந்தவிதச் சாதகமான சூழலும் அற்றதாக உள்ளது என்பது வெளிப்படை யதார்த்தம். மூன்று தசாப்தகாலப் போர்ச் சூழலுக்கும், அதனடிப்படையிலான தேவைகளுக்கும் ஏற்பச் செயற்பட்டு வந்த ஈழத்துத் தமிழ் அரங்கானது உண்மையில் இன்று தனக்குப் பழக்கப்படாத ஒரு புதிய புறச் சூழலை எதிர்கொள்கின்றது. இந்தப் புதிய சூழலில் எப்படித் தன்னைத் தக்க வைக்கவும், வளர்த்தெடுக்கவும் போகின்றது என்பதே 'இன்றுள்ள ஈழத்துத் தமிழ் அரங்கிற்கான சவாலாகும்'. அவ்வகையில், (i) போருக்குள் அரங்கு பெற்ற அல்லது அடைந்த வீரியத்தினை அடையாளம் கண்டு அதனைப் பண்பு ரீதியான பகுப்பாய்விற்கு உட்படுத்துதல், (ii) போர்க்கால அரங்கச் செயற்பாடுகள் அரசியல், சமூக, பண்பாட்டு மற்றும் விழிப்புணர்வுகளுக்கான செயற்பாடுகளுக்கு அப்பால் 'ஈழத்துத் தமிழ் அரங்கு' என்னும் படிமத்தை அக்காலத்தில் மீள அழுத்தத் தவறியமைக்கான காரணங்களைப் பகுப்பாய்விற்கு உட்படுத்துதல், (iii) போருக்குப் பின்னரான இன்றைய சூழலில் 'ஈழத்துத் தமிழ் அரங்கு' என்னும் படிமம் அல்லது கோட்பாட்டை நிலைபெறச் செய்வதற்கும், வளர்த்தெடுப்பதற்குமான வழிமுறைகளைக் கண்டறிதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் இவ் ஆய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. போர்ச்சூழலில் பல்வேறுபட்ட அரங்கச் செயலாளிகளினால் பல்வகைப்பட்ட அரங்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளபோதிலும் குறித்தவொரு அரங்கக் குழுவினரின் தொடர் அளிக்கைமுறைமைகளை மையப்படுத்திய பகுப்பாய்வினைச் செய்வது ஆய்வின் செம்மைப்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கும் என்னும் வகையில் 1990 களில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து இலங்கையின் பல பாகங்களிலும் கிளைவிட்ட 'அரங்கச் செயற்பாட்டுக் குழுவின்' (TAG) அரங்க முன்னெடுப்புக்களைத் தனிநபர்க் கற்கைக்கு (Case study) உட்படுத்திய ஜேம்ஸ் தொம்சனின் ஆய்வறிக்கை ஆய்விற்கான முதன்மைத்தரவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

ஆய்வாளரின் நேரடிப் பங்குபற்றல் அவதானங்களுக்கூடாகவும், இக் குழுச் செயற்பாட்டாளர்களுடனான அனுபவப் பகிர்வுகளுக்கூடாகவும், சர்வதேச, சுதேச ஆய்வறிக்கைகள், தகவற்கோப்புகள் என்பவற்றுக்கூடாகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களைப் பண்புரீதியான பகுப்பாய்விற்கு உட்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. போர்க்கால அரங்கச் செயற்பாடுகளிற்கு ஊடாக ஈழத்துத் தமிழ் அரங்கானது பிரதானமாக இரண்டு வகைப்பட்ட உள்ளாற்றல்களை அடைந்துள்ளது. ஒன்று, எத்தகைய நெருக்கடியான சூழ்நிலைக்குள்ளும் நின்று செயற்படக்கூடிய அசாத்தியமான சாதுரியமும், மதிநுட்பமும். இரண்டாவது, பல்வகைப்பட்ட பார்ப்போருக்குமேற்ப ஆற்றப்படும் 'பல்வகைமை' (Diversity) அரங்கச் செயற்பாட்டுக்கான ஆற்றல். அதே வேளையில், போர்க்காலத்து ஈழத்துத் தமிழ் அரங்கச் செயற்பாடுகள் பெரும்பாலும் போரும், ஒடுக்குமுறைகளும், சமூகப் பிறழ்வுகளும் அச்சுறுத்தல்களாக இருந்தவேளையில் வெளிப்படுத்தப்பட்ட சூழ்விளைவு (reaction) ஆற்றல்களாகவே இருந்துள்ளன. அரங்கச் செயற்பாட்டாளர்கள் அரங்கவியலாளர்களாகச் செயற்பட்டதனையும்விடச் சமூகமாற்றச் செயற்பாட்டாளர்களாகவே பெரிதும் தொழிற்பட்டுள்ளனர். அதேபோன்று பார்ப்போரும் அரங்கப் பார்ப்போராக அல்லாது பாதிக்கப்பட்டோர் (Victims) அல்லது பயனாளிகள் (Beneficiaries) என்கின்ற நிலையில் இருந்தே பெரும்பாலும் அரங்கைப் பார்க்கவும், அதில் பங்கெடுக்கவும் செய்துள்ளனர். மேற்குறிப்பிட்ட காரணங்களினால் முதலாவதாக, அரங்கவியலாளர்கள் சமூகச் செயற்பாடு என்னும் செயற்பாட்டுக்கு அப்பால் தம் 'அரங்கச் செயற்பாட்டை ஒரு பேண்தகைமைமிக்க அரங்கச் செயற்பாடாக மாற்றியமைப்பதற்கான திறனை (Skill) வளர்ப்பதில் அக்கறை காட்டாது விட்டுள்ளனர்.' இரண்டாவது, அரங்க அனுபவம் என்பது குறித்த கருத்துநிலையின் அடிப்படையில் ஒன்றிக் கலப்பதும், உணர்ச்சிப் பிரவாகம் கொள்வதும் அல்லது வாழ்வியலுக்குத் தேவையான போதனைகளைக் கேட்டறிவதும் என்னும் வகையில் பார்ப்போர் மத்தியில் பதியப்படலாயிற்று. போருக்குப் பின்னரான இன்றைய சூழலில் ஈழத்துத் தமிழ் அரங்கானது நாட்டின் அரசியல் நிலைமை சார்ந்ததும், மக்களின் வாழ்வியலில் ஏற்பட்டுள்ள திடீர் மாற்றங்கள் சார்ந்ததுமான புதிய வடிவிலான நெருக்கடி நிலைமைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழலில் ஈழத்துத் தமிழ் அரங்கானது பாதிக்கப்பட்ட மக்கள், பயனாளிகளுக்கான அரங்கு என்பதற்கு அப்பால் பார்ப்போருக்கான அரங்கச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. அரசியல் மற்றும் சமூக, பண்பாட்டு மாற்றத்துக்கான அரங்கு என்பதற்கு அப்பால் 'ஈழத்துத் தமிழ் அரங்கு' என்னும் அடையாளத்தை மீள நிலைநாட்டுவதற்கான அரங்கச் செயற்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளது. அப்படி ஒரு அரங்கைக் கட்டியெழுப்புவதே ஈழத்துத் தமிழ் அரங்கவியலாளரின் அரசியல் மற்றும் சமூகச் செயற்பாடாகவும் இருக்க முடியும். இதற்காகப் போர்க்கால அரங்கில் பெற்ற எத்தகைய நெருக்கடி நிலைமைகளுக்குள்ளும் நின்று செயலாற்றுவதற்கான உத்திகள், மற்றும் பல்வகைப்பட்ட மக்களுக்குமான அரங்கைச் செய்யக்கூடிய அரங்கப் பல்வகைமை ஆகிய உள்ளார்ந்த ஆற்றலை மீள்கட்டுமானம் செய்வதும் அதேவேளை அரசியல் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் என்பதற்கு அப்பால் அரங்கவியலாளருக்குரிய திறன்களை அரங்கச் செயற்பாட்டாளர்கள் வளர்த்துக் கொண்டு 'ஈழத்துத் தமிழ் அரங்கு' என்னும் அடையாளத்தை முன்னிலைப்படுத்தி அரங்கச் செயற்பாடுகளை முன்னெடுப்பதே போருக்குப் பின்னரான சவால்களை எதிர் கொள்வதற்கும், வென்றெடுப்பதற்குமான வழியாக உள்ளது.